# சாட்சிய வாக்குமூலம்
## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,
சிறப்பு அமர்வு வழக்கு எண் 28 /2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 3 (LW –3 ) | நாள் | 27.11.2025 |
| பெயர் | உதயராஜ் | கிராமம் | |
| தந்தை பெயர் | மோகன் | தொழில் | – வெல்டிங் |
| தாலுக்கா | | வயது | – 24 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது நடராஜபுரத்தில் வசித்து வருகிறேன். வெல்டிங் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அசா 1 மற்றும் 2 ஆகியோரை தெரியும். நான் இந்து ஆதிதிராவிட வகுப்பை சேர்ந்தவன். கடந்த 03.07.2025 அன்று இரவு சுமார் 10.00 மணிக்கு இறந்துபோன ராஜேஷ், வினோத்ராஜ், பூபாலன், சரத், ரவி மகன் ராஜேஷ் ஆகியோர் வரதம்பட்டு பாலத்தில் நின்று கொண்டிருந்தோம். அப்போது இறந்துபோன ராஜேஷ் வயிறு வலிக்குது என்று சொல்லி பாத்ரூம் போக பாரத் பெட்ரோல் பங்கிற்கு சென்றார். அவருக்கு முட்டிக்கு கீழ் இடது காலில் அறுவை சிகிச்சை செய்து செயற்கை கால் பொருத்தப்பட்டுள்ளதால் அவர் வெஸ்டர்ன் டாய்லட்க்காக அங்கு போனார். அவர் சென்று வெகு நேரமானதால் வினோத்ராஜ் போன் செய்தார். அவர் போனை எடுக்கததால் நான், வினோத்ராஜ், பூபாலன் ஆகிய மூவரும் ஒரே பைக்கில் பெட்ரோல் பங்கிற்கு போனோம். அப்போது உத்தண்டராயன்பேட்டை ரஞ்சித் நீளமான அரிவாளுடன் சுடுகாடு அருகில் நின்றார். பக்கத்தில் இறந்துபோன ராஜேஷ் நின்று கொண்டிருந்தார். ரஞ்சித்திற்கும் இறந்துபோன

M.Udhayaraj

ராஜேஷ்க்கு ஆகாது என்பதால் ஏன் அங்கு நிற்கிறார் என்று பார்த்து கொண்டு போகும்போது ரஞ்சித் நான் ஆட்டோ விட்டு அடிச்சதுக்கு வீடு தேடி காசு வாங்க வந்தியா பறக்குச்சிக்காரி மகனே தேவுடியா மகனே என்று திட்டி தலையிலும் முகத்திலும் அரிவாளால் மாறி மாறி வெட்டினார். வெட்டும் போது நாங்கள் பதறி ராஜேஷ் பக்கம் ஓடினோம். வாங்கடா பறக்குச்சி மகன்களே தேவுடியா மகன்களே உங்களையும் வெட்டாமல் விடமாட்டேன் என்று திட்டி அரிவாளை வீசினார். அப்போது இறந்துபோன ராஜேஷ் ரஞ்சித்தின் கைலியை பிடித்து கீழே விழுந்துவிட்டார். பின்னர் ரஞ்சித் அவரின் மஞ்சள் கலர் வண்டியை எடுத்து கொண்டு பட்டவர்த்தி பக்கமாக சென்று விட்டார். திரும்ப வந்து பார்த்தபோது ராஜேஷ்கக்கு உயிர் இல்லை. அப்போது வினோத் ராஜ் ராஜேஷ் அம்மா அப்பாவிற்கு போன் செய்தார். நான், வினோத்ராஜ், பூபாலன் மூவரும் வரதம்பட்டுக்கு சென்று சரத் மற்றும் வரதம்பட்டு ராஜேஷ் ஆகியோர் ஊரில் உள்ளவர்களிடம் சொன்னோம். பிறகு நானும் வினோத்ராஜ், பூபாலன் எங்கள் ஊர் நாட்டாமைக்காரர்கள் ஆகியோர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். கடந்த 15.10.2023 அன்று எங்கள் ஊர் கலியபெருமாள் மகன் அரவிந்த் என்பவரை ரஞ்சித் ஆட்டோவை வைத்து மோதிவிட்டார். இறந்துபோன ராஜேஷ், மற்றும் ஊர்காரரர்கள் ரஞ்சித் வீட்டிற்கு சென்று நஷ்டஈடு கேட்டபோது பறக்குச்சிக்காரி மகனே தேவுடியா மகனே வீடு தேடி வந்து காசு கேட்கும் அளவிற்கு தைரியம் வந்துடுச்சா என்று திட்டினார். இருதரப்பினருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு மணல் மேடு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்தார்கள். ஆஜர் எதிரி மீது PCR வழக்குகள் நிலுவையில் உள்ளது. ராஜேஷ் பட்டவர்த்தி வரதம்பட்டு பகுதிகளில் உட்கார்ந்திருந்தபோது ஆஜரல் எதிரி ராஜேஷை என்றைக்காக இருந்தாலும் வெட்டிக்கொன்றுவிடுவேன் என்று கூறியதை ராஜேஷ்

M. Vinothraj

என்னிடம் சொன்னார். ஆஜர் எதிரி அவர் சொன்னதுபோல வெட்டிக்கொன்றுவிட்டார். இது சம்பந்தமாக காவல் துணைக்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

M. [signature]

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature]

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 28 /2025

அரசு தரப்பு சாட்சி 4 (LW - 4) நாள் 27.11.2025

பெயர் சரத் கிராமம்

தந்தை பெயர் சங்கர் என்ற ஜெயசங்கர் தொழில்

தாலுக்கா வயது 25

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் வரதம்பட்டு கீழத்தெருவில் வசிக்கிறேன். வெலடிங் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும் அசா 1 முதல் 3 வரையானவர்களை தெரியும். நான் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். கடந்த 03.07.2024 அன்று இரவு சுமார் 9.30-10.00 மணிக்கு நான், சரத், பூபாலன், வினோத்ராஜ், இறந்துபோன ராஜேஷ், வரதம்பட்டு ரவி மகன் ராஜேஷ் ஆகியோர் வரதம்பட்டு பாலத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது இறந்துபோன ராஜேஷ் பாத்ரூம் போக பாரத் பெட்ரோல் பங்கிற்கு சென்றார். அவருக்கு இடது காலில் முட்டிக்கு கீழ் செயற்கை கால் பொருத்தப்பட்டுள்ளது அதனால் அவர் வெஸ்டர்ன் டாய்லட்டிற்கு சென்றார். அவர் சென்று வெகு நேரமானதால் வினோத்ராஜ் அவருக்கு போன் செய்தார் அவர் போனை எடுக்கவில்லை. பூபாலன், வினோத்ராஜ், உதயராஜ் ஆகிய மூவரும் ராஜேஷை நாங்கள் அழைத்து செல்கிறோம் நீங்கள் போங்க என்று சொல்லிவிட்டு பெட்ரோல் பங்கிற்கு போனார்கள். போய் ஒரு 10 நிமிடம் கழித்து அவர்கள் திரும்பி கத்திக்கொண்டு வந்தார்கள். அப்போது அவர்கள் ராஜேஷை

J. Sarath

உத்தண்டராயன்பேட்டை ரஞ்சித் வெட்டிவிட்டார் என்று சொன்னார்கள். நாங்கள் அனைவரும் அங்கு போனோம். ராஜேஷ் இறந்துவிட்டார். அவருக்கு முகத்தில் வெட்டுக்காயம் இருந்தது. பெட்ரோல் பங்கிற்கு முன்னாடி சுடுகாடு மற்றும் கருப்பு சாமிகோவில் எதிரே அங்கு தான் அவர் இறந்து கிடந்தார். ஆஜர் எதிரி ஏற்கனவே ஆட்டோவை விட்டுஅரவிந்த் என்பவரை மோதி விபத்து ஆயிருக்கு என்று இறந்துபோன ராஜேஷ் என்னிடம் சொன்னார். அதற்காக எங்கள் ஊர்காரர்கள் ஆஜர் எதிரியிடம் நஷ்டஈடு கேட்டு அவர் வீட்டிற்கு சென்றுள்ளார்கள். அங்கு பிரச்சனை ஆகியுள்ளது அதனால் இருதரப்பினர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இறந்துபோன ராஜேஷ் என்பவரால் நீண்ட நேரம் நிற்கமுடியாது. அதனால் வண்டியில் உட்கார்ந்திருப்பார். அதற்காக அவன் மரியாதையில்லாமல் என் முன்னாடி உட்கார்ந்திருக்கான் என்று பறக்குச்சிக்காரி மகனே என்று சாதி பெயரை சொல்லிதிட்டி என்றைக்காக இருந்தாலும் உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று போகும்போதும் வரும்போதும் திட்டியதாக ராஜேஷ் என்னிடம் சொன்னார். ரஞ்சித் கள்ளர் வகுப்பை சேர்ந்தவர். இது சம்பந்தமாக காவல் துணைக்கணகாணிப்பாளர் மறுநாள் 04.07.2024 என்னை விசாரித்தார்.

J. Aarath

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளித்ததை அதனை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவர் என் முன்பு ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

27.11.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை